

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (25.09.2023) கிருஷ்ணகிரி மாவட்டம், குந்தாரப்பள்ளி, குமரன் மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், 500 மகளிருக்கு மகளிர் உரிமைத் திட்டத்திற்கான ஏ.டி.எம். அட்டைகள் மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ், மதியழகன், ராமச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சுகவனம் , செங்குட்டுவன், முருகன், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி மணிமேகலை நாகராஜ் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும்

# பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப்.27-

பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (25.09.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவகம், மதுரை கீழக்கரை ஜல்லிக்கட்டு அரங்கம், பாரம்பரிய கட்டடங்களை புனரமைத்தல், சுகாதாரத் துறையின் கட்டடப் பணிகள் மற்றும் ஜெய்கா நிதி உதவி பெறும் மருத்துவ கட்டட கட்டுமான பணிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், நபார்டு வங்கி உதவியுடன் பள்ளிக் கட்டடப் பணிகள், நீதிமன்ற கட்டடப் பணிகள், நினைவகங்கள் உள்ளிட்ட அனைத்து பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது.

மேலும், பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் தரத்துடன் மேற்கொள்வதுடன், கட்டுமான பொருட்களின் ஆய்வக பரிசோதனைகள், களப் பரிசோதனைகள் மேற்கொண்டு அதன் ஆவணங்கள், அறிக்கைகள், பணித் தளத்தில் தயார் நிலையில் ஆய்விற்கு வைத்திருக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகள் மற்றும் இதர முக்கிய அரசு கட்டடங்களில் இயங்கி வரும் மின் தூக்கி, குளிர்சாதன வசதி மற்றும் இதர மின் வசதிகள் அவ்வப்போது முறையாக பராமரித்தல் வேண்டும்.

மின் பணிகளுக்கான ஒப்பந்தம், சிவில் பணிகளுக்கு ஒப்பந்தம் இறுதி செய்யும் போதே இறுதி செய்ய வேண்டும்.

நினைவக கட்டட பணிகள் மற்றும் சிலை அமைக்கும் பணிகளுக்கான அறிவிப்புகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

தனியார் கட்டடங்களுக்கு வழங்கப்படும் கட்டட உறுதிச் சான்று குறித்த விவரங்கள் அவ்வப்போது தெரிவித்தல் வேண்டும்.

பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டடங்களுக்கு பணிகள் தொடங்குவதற்கு முன்பு பெறப்படவேண்டிய கட்டட வரைபட அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட கட்டட அனுமதிகளுக்கு உடனடியாக விண்ணப்பித்து, அனுமதி பெற தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், "தரமே நிரந்தரம்" என்ற அடிப்படையில் பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, அரசு சிறப்பு அலுவலர் ஆர்.விஸ்வநாத், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு, இராஜசேகரன், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எ.வள்ளுவன், தலைமை கட்டடக் கலைஞர் திருமதி எம். இளவேன்மாள் மற்றும் பொதுப்பணித் துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## அக்டோபர் 3வது வாரத்தில் வடகிழக்குப் பருவமழை!

சென்னை, செப்.27-

இந்தாண்டு வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் 3வது வாரத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட இந்திய மாநிலங்களில் தொடர்ந்து கனமழை பெய்து, பெரும் வெள்ளச்சேதம் ஏற்பட்டிருந்த நிலையில் வட மேற்கு இந்திய மாநிலங்களிலிருந்து தென்மேற்குப் பருவமழை விலக தொடங்கியுள்ளது.

மேலும், படிப்படியாக இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்தும் தென்மேற்குப் பருவமழை விலகும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், அக்டோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழையானது கடந்த ஜூன் 1ஆம் தேதி கேரளத்தில் தொடங்கி படிப்படியாக ஜூலை 8ஆம் தேதி இதர மாநிலங்களுக்கும் முழுமையாக பரவியது. இந்த நிலையில், அக்டோபர் 15ஆம் தேதிக்குள் ஒட்டுமொத்தமாக பருவமழை விடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தென்மேற்கு பருவமழைக் காலத்தில், இந்தியாவில் 780.3 மி.மீ. மழை பதிவாகியிருக்கிறது. இயல்பான அளவு 832.4 மி.மீ. ஆகும்.

### என்.இளையராஜா தலைமை! ஏ.ஆர்.ராஜா முன்னிலை! குத்தாலம் கோடியமங்கலத்தில்

# இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார்!

நாகை, செப்.27-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் "கோடியமங்கலத்தில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் முகாம் நடைபெற்றது. முகாமிற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என். இளையராஜா தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஆர். ராஜா, முன்னிலை வகித்தார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது வரவேற்றார். இல்லாம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான. இமையநாதன், கு.வைத்தியநாதன், எம்.அப்துல்மாலிக், மாவட்ட இளைஞர் துணை அமைப்பாளர்கள் வினோத் பாண்டியன், எம்.எஸ்.விஜய், கோசி.ம. திருவாவளவன், சௌ. சர்வோதையன், மாவட்டப் பிரதிநிதி ராஜசேகர், துணைச் செயலாளர் வரதராஜன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர் மதியழகன், மில்லர், சிவஞான சுந்தரி, சசிகலா, ராகவன், ரகுவர்மன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, சேப்பாக்கம், பொதுப்பணித்துறை வளாக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (25.09.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி, அரசு சிறப்பு அலுவலர் ஆர்.விஸ்வநாத், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எ.வள்ளுவன், தலைமை கட்டடக் கலைஞர் திருமதி எம்.இளவேன்மாள், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (25.09.2023) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழங்குடியின மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் சாதிச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் , மதியழகன், ராமச்சந்திரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு, மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இந்து சமய அறநிலையத் துறையின் சிறப்பான செயல்பாட்டினால்

# உபயதாரர்கள் மூலம் 750 கோடி ரூபாய் நிதியாக கிடைத்திருக்கிறது!

## திருக்கோயில்களில் 5 பெண் ஓதுவார்கள் உட்பட 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, செப். 27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (25-09-2023) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 5 பெண் ஓதுவார்கள் உட்பட 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளையும், திருக்கோயில்களில் பணிபுரிந்து பணி காலத்தில் உயிரிழந்த 3 பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

புதிதாகப் பொறுப்பேற்ற திராவிட முன்னேற்ற கழக அரசானது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவருடைய வழிகாட்டுதலின்படி, இந்த சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு பல்வேறு முன்னெடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. திருக்கோயில்கள் புனரமைத்தல், திருக்குளங்கள், திருத்தேர்கள், நந்தவனங்களை சீரமைத்தல், திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், அடிப்படை தேவைகளான போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளை செய்து தருதல், திருக்கோயில் நிர்வாகங்களை மேம்படுத்திடும் வகையில் அவ்வபோது ஏற்படும் அலுவலர் மற்றும் பணியாளர் காலிப்பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், இந்து சமய அறக்கொடைகள் சட்டவிதிகளின் படி நேரடியாகவும் தேர்வு செய்தும், கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை வழங்கியும் நிரப்பி வருகிறது.

இன்றைய தினம் திருக்கோயில்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. அதிலும் எல்லோருக்கும் எல்லாம் என்ற முதலமைச்சர் அவர்களின் வார்த்தைகளுக்கிணங்க ஆணுக்கு பெண் நிகர் என்பதை நிரூபிக்கின்ற வகையில் திராவிட மாடல் ஆட்சியில் ஏற்கனவே 5 திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது புதிதாக நியமிக்கப்பட்டிருக்கின்ற 15 ஓதுவார்களில் 5 பெண் ஓதுவார்கள் நியமனம் என்பது உண்மையிலேயே பெரும் மகிழ்ச்சிக்குரிய நற்செயல் ஆகும். இதுவரை நியமிக்கப்பட்டுள்ள 10 பெண் ஓதுவார்களுமே திராவிட முன்னேற்ற கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு முழு அளவிற்கு துறைக்கு சுதந்திரம் அளித்து பணிகளை மேற்கொள்ளச் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

திருக்கோயில்களில் இறைவன் இறைவிக்கு வழிபாடு நடைபெறும் போது ஆகம விதிகள் மற்றும் திருக்கோயில் பழக்க வழக்கங்களின்படி தேவாரம், திருவாசகம், திருமுறை, திவ்யபிரபந்தம், பாசுரங்கள் ஆகியவை பாடப்பட்டு வருகின்றன. இறைவனை தமிழில் இசையோடு பாடி வழிபாடு செய்யும் பணியானது சைவ திருக்கோயில்களில் ஓதுவார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இறைவனுக்கு செய்யப்படுகின்ற வழிபாடுகளின் போது ஓதுவார்கள் அனைத்து திருக்கோயில்களிலும் நியமிக்கப்படுகின்ற முயற்சியை துறை எடுத்துக் கொண்டு வருகின்றது.

இதுவரையில் திருக்கோயில்களில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 39 ஓதுவார் பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 183 ஓதுவார் பணியிடங்களில் இதுவரை 107 ஓதுவார்கள் திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றார்கள். இதர திருக்கோயில்களில் காலியாக இருக்கின்ற ஓதுவார் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பணியாணை பெற்றுள்ள ஓதுவார்கள் இன்றைய தினமே அந்தந்த திருக்கோயில்களுக்கு சென்று ஓதுவார் பணியை மேற்கொள்வார்கள்.

ஏற்கனவே அர்ச்சகர் பயிற்சி பயின்ற 3 பெண்கள் விரைவில் உதவி அர்ச்சகர் பணிக்கு நியமிக்கப்பட இருக்கின்றார்கள். அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி முடித்தவர்களுக்கு திருக்கோயில்களில் தலைமை அர்ச்சகர்களின் கீழ் உதவி அர்ச்சகர்களாக ஓராண்டுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மாதாந்திர ஊக்கத் தொகையாக ரூ.8,000 வழங்கப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு 71 பேர் விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்து சமய அறநிலையத் துறையால் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் தொல்லியல் துறை உதவியோடு கண்டறியப்பட்டுள்ளன. அத்திருக்கோயில்களை புனரமைக்க முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளில் தலா ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடி அரசு மானியம் வழங்கியுள்ளார். அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் கடந்தாண்டில் 113 திருக் கோயில்களும், நடப்பாண்டில் 84 திருக்கோயில்களும் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியின் மீதும், துறையின் மீதும் முழு நம்பிக்கை இருப்பதனால் தான் உபயதாரர்கள் அதிகளவு நிதியை வழங்குகின்றார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றபின் இதுவரை ரூ.750 கோடி உபயதாரர்கள் நிதியாக கிடைத்திருக்கிறது. இதுவும் ஒரு புரட்சி தான்.

இந்து சமய அறநிலையத் துறையை கோயிலிலிருந்து வெளியேறு என்று சொல்பவர்கள் ஆன்மிகத்தை வைத்து அரசியல் செய்யலாம் என்று நினைப்பவர்கள்தான். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இறையன்பர்கள், அச்சகர்கள், பணியாளர்கள் என அனைவரையும் ஒரு சேர அரவணைத்து அனைவரின் நலனை பாதுகாத்து வருவதால் ஆன்மிகத்தை வைத்து அரசியல் செய்பவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அவர்களின் எண்ணங்கள் ஈடேறாததால் தான் இப்படி திருக்கோயில்களில் இருந்து துறை வெளியேற வேண்டும் என்று தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார்கள். முந்தைய காலங்களை விட தற்போது இந்த ஆட்சியில் இந்து சமய அறநிலைத்துறை சிறப்போடு செயல்படுகிறது என்பதனை மனசாட்சி உள்ளவர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள்.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் புதிதாக 11 பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள். தற்போது அர்ச்சகர்கள் பயிற்சி பெறுவதற்கு வரை 117 பேர் விண்ணப்பித்திருக்கின்றார்கள். 15 திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு புதிதாக 5 திருக்கோயில்கள் சேர்க்கப்படவுள்ளன. படிப்படியாக 48 முதுநிலை திருக்கோயில்களிலும்நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

இந்த ஆட்சியானது சட்டத்திற்குட்பட்டு நடக்கின்ற ஆட்சியாகும். குறைகளை சுட்டி காட்டினால் அதனை சரிசெய்து நிறைவாக ஆக்குவதற்கு அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தயாராக இருக்கின்றார்கள். விமர்சனத்தை பார்த்து எப்பொழுதுமே கோபப்படாத ஆட்சி இது. விமர்சனங்கள் நியாயமானதாக இருந்தால் அதற்கு பதில் சொல்வதும், அதனை சரி செய்யக் கொள்வதற்கும் இந்த ஆட்சி தயாராக இருக்கின்றது. நல்ல விசயங்கள் என்று தெரிந்து கூட தொடர்ந்து அவதூறு பரப்புபவர்கள் மீது நிச்சயம் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்வோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செய லாளர் டாக்டர் க.மணிவாசகன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கோ.மங்கையர்க்கரசி, கி.ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.


**தமிழ்நாடு கனிம நிறுவனம்**

TAMIN

எண்.31, காமராஜர் சாலை, சேப்பாக்கம், சென்னை-600005.
தொலைபேசி: 044-29862018, 28511972

**இ-ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்**

| | | |
|---|---|---|
| 1 | திட்டத்தின் பெயர் | டாமின் நிறுவனத்திற்குட்பட்ட சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையில் அமைந்துள்ள மூன்று சேகரிப்பு குளங்களில் இருப்பிலுள்ள Tailing Waste (உள்ளது உள்ளபடியே) விற்பனை |
| 2 | ஒப்பந்தப்புள்ளி எண் / நாள்<br>ஒப்பந்தப்புள்ளி ID எண் | 779-A/விஏபி-2/2023, நாள்: 12.09.2023<br>2023_TNMIN_373152_1 |
| 3 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | 11.10.2023 பிற்பகல் 4.00 மணி வரை |
| 4 | இ-ஒப்பந்தப்புள்ளி தளத்தில் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் | 12.10.2023 பிற்பகல் 4.00 மணி |
| 5 | முன்வைப்புத் தொகை | ரூ.1,18,000/-<br>(ரூபாய் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) |

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: https://tntenders.gov.in இணையதளத்தினை பார்வையிடவும்

செ.ம.தொ.இ./5263/ஒப்பந்தப்புள்ளி/2023 பொது மேலாளர் (நிதி)



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பே.சா.து.ந.க.எண்.பி4/3424/2023 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| **பல்வேறு மண்டலங்களில் உள்ள 32 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24)** | **36, 41 & 50** | **குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.77.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.81.00 இலட்சங்கள்** | **பணியின் மதிப்பு 1 சதவீதம்** | **முதல் வகுப்பு** |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **04.10.2023 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **05.10.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 5272 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)**




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (25.09.2023) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வுசெய்யப்பட்ட 5 பெண் ஓதுவார்கள் உட்பட 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசகன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.